**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No.118/2022**

PW-3

| | | | |
|---|---|---|---|
| Name | வீராசாமி(PW3) | | |
| Father's Name | நடராஜ் செட்டியார் | தொழில் | கூலி |
| Village | நம்பியம்பாளையம் | | |
| Taluk | அவிநாசி | Age | 45 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th **day of May 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு விசைதறி கூடத்தில் படிப்பறிந்து வருகிறேன். கடந்த 27.01.2022 ம் தேதி காலை 08.30 மணியளவில் வேலைக்கு செல்வதற்காக ஆரி கவுண்டன் பாளையம் பஸ் ஸ்டாப் அருகே நான் சென்று கொண்டிருந்தபோது பழனிச்சாமி கிழக்கிலிருந்து மேற்காக ஜூப்பிட்டர் இரு சக்கர வாகனத்தில் வந்தார். மேற்கிலிருந்து கிழக்காக அப்பாச்சி இருசக்கர வாகனத்தில் ஸ்ரீனிவாசன் வந்தார். பழனிசாமி வடக்காக திரும்பும்போது எதிர்பாராத விதமாக சீனிவாசன் வந்த வாகனம் அவர் மீது மோதியது விபத்து ஏற்பட்டு விட்டது. பழனிச்சாமிக்கு சிறு காயம் ஏற்பட்டது. சீனிவாசனுக்கு பலத்த காயம் ஆகியிருந்தது. அவரை ஆம்புலன்சில் ஏற்றி விட்டோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

விபத்து நடந்த சாலை அதிக போக்குவரத்து உள்ள சாலை என்றால் சரிதான். நான் சத்தம் கேட்டு வந்து வெளியில் பார்த்தேனா என்றால் இல்லை நான் வேலைக்கு செல்வதற்காக வெளியே வந்து கொண்டிருந்தபோது இந்த விபத்து நடந்தது. அப்பாச்சி வாகனத்திற்கு முன்னும் பின்னும் என்ன வாகனம் சென்றது என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்ததை நான் பார்த்தவுடன் சம்பவம் இடத்திற்கு நான் ஐந்து நிமிடத்தில் சென்று விட்டேன். இருசக்கர வாகனங்களுக்கு முன்பும் பின்பும் என்ன வாகனங்கள் சென்றது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இரண்டு இரு சக்கர வாகனங்களிலும் எத்தனை நபர்கள் பயணித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது கூட்டமாக இருந்ததால் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு போலீஸ் வந்த பின்னிட்டு தான் நான் சென்றேன். நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. அப்பாச்சி வாகனத்தில் வந்தவர் தான் அதி வேகமாக வந்தார்

என்றும் அவர்தான் இந்த விபத்திற்கு காரணம் என்றால் சரிதான்.நான் அன்றைய தினம் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் நான் உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |